# கட்டாயக் கல்விக்காலம் முடிவடைந்த பின்பு

## வேலைக்கான பயிற்சியும் அதோடு தொடர்ந்கு படிக்கும் பாடசாலைகளும்

## வேலைக்கான பயிற்சியும் அதோடு தொடர்ந்கு படிக்கும் பாடசாலைகளும்

**கட்டாயக் கல்விக்காலம் முடிவடைந்த பின் யுவதிகளுக்கும் மேலும் இளைஞர்களுக்கும் பல தரப்பட்ட கல்வி முறைகள் இருக்கின்றன.**




© Grafik: SBFI

# வேலைக்கான பயிற்சிகள்

----

**வேலைக்கான அடிப்படைக் கல்வி (**Berufslehren **வேலைக்கான பயிற்சிகள்) போன்றவை முறையாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பயிற்சிகள், அதிலே பயிற்சிக்கான காலமும் அதோடு பயிற்சித் திட்டமும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். கற்றுக்கொள்பவர்களுக்கும் (பயிற்சி பெறுபவர்கள்) மேலும் வேலைக்கான பயிற்சி கொடுக்கும் ஸ்தாபனத்திற்கும் இடையில் ஒரு பயிற்சிக்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும். மாகாணத்திற்குரிய (கன்ரோனுக்குரிய) அதிகார சபை அந்த ஒப்பந்தத்திற்கு அனுமதி கொடுக்கும்.**

**பாடசாலையின் பங்கு பொதுவான பள்ளிக்கூட படிப்பையும் அதோடு வேலை சம்மந்தமான பாடங்களையும் தொழில்த் துறைக்கு கற்பிக்கும் கல்லூரியின் (**Berufs-fachschulen**) மூலமாக சொல்லிக் கொடுப்பது.**

**அதோடு கற்றுக் கொள்பவர்கள் வேலைத் தளங்களைப் பற்றிய வகுப்புகளுக்கு (அறிமுகப் படுத்தும் வகுப்பு) போவார்கள், இந்த சலுகைகள் வேலை கொடுப்பவர்கள் - அதோடு வர்த்தக ஸ்தாபனங்களால் நடாத்தப்படும்.**

**வேலை சம்மந்தமான அடிப்படைக் கல்வி இரண்டு தொடக்கம் நாலு வருடங்கள் இருக்கும்.**

**இந்த தொழில் சம்மந்தமான அடிப்படைப் கல்வி கல்வித் தகைமைக்கான செயல்முறையுடன் (பயிற்சிக்கான இறுதித் தேர்வு -** Lehrabschlussprüfung**) முடிவடையும். இந்த 3 தொடக்கம் 4 வருட அடிப்படைக் கல்வி ஒரு சுவிசிற்குரிய கல்வித் தகைமைக்கான பத்திரத்திற்கும், இரண்டு வருடப் படிப்பு ஒரு சுவிசிற்குரிய வேலைக்கான பத்திரத்திற்கும் வழி காட்டும். இந்த சுவிசிற்குரிய கல்வித் தகைமைக்கான பத்திரத்தோடு பொதுவான கல்வியயை மேலதிகமாக படித்து முடித்தால் (வேலைக்கான மத்துாரா பரீட்சை** Berufsmaturität**) வேலைக்கான மத்துாரா பரீட்சைக்கான பத்திரம் (**Berufsmaturitätszeugnis**) கிடைக்கும்.**

<u>வேலைக்காக முதலே தயார்ப்படுத்தும் வருடம்</u>

**வேலைக்காக முதலே தயார்ப்படுத்துவது மேலும் முற்பயிற்சி ஒரு வருஷம் இடம்பெறும். அங்கே இளைஞர்களை பயிற்சியின் மூலமாகவும் அதோடு கற்பதன் மூலமாகவும் வேலைக்கான பயிற்சிக்கு தயார்ப்படுத்துவார்கள். இளைஞர்கள் பள்ளிக்கூடச் சலுகைகள் (5 நாட்களும் பாடசாலையில்), பயிற்சி (3 தொடக்கம் 4 நாட்கள் பாடசாலையில், 1 தொடக்கம் 2 நாட்கள் வேலைத் தளங்களில்) அல்லது முறையே வர்த்தக ஸ்தாபனங்களில் முற்பயிற்சி (1 தொடக்கம் 2 நாட்கள் பாடசலை, 3**

தொடக்கம் 4 நாட்கள் பயிற்சியளிக்கும் ஸ்தாபனங்களில்) ஐ தேர்ந்தெடுக்கலாம். 15 தொடக்கம் 21 வயது வரையுள்ள வேறு நாட்டு பாஷை பேசுபவர்களை ஒன்றிணைத்து வேலைக்கு தாயார்ப்படுத்துவார்கள். டொச் பாஷை பழகுவதற்கும் மேலும் வேலையை தெரிவுசெய்வதற்கு உதவுவதறற்கும் முக்கியத்துவம் அளிப்பார்கள்.

## வேலைக்கான மத்துாரா (Berufsmaturität)

வேலைக்கான மத்துாரா என்பது கற்று முடித்த வேலைக்கான அடிப்படை கல்வியோடு (வேலைக்கான பயிற்சி) ஒரு பொதுவான கல்வியறிவை கூட்டுவதாகும், அது தொழில் துறையில் விஷேஷ தேர்ச்சிக்கு கற்பிக்கும் கல்லுாரியில் (Berufsmaturitätsschule (BMS)) சொல்லிக் கொடுப்பார்கள்.

வேலைக்கான மத்துாரா பாடங்களில் பாஷைக்கான பாடங்கள், சமூகவியல் சம்மந்தமான பாடங்கள், கணிதம் அதேபோல் எந்த பாதை என்பதைப் பொறுத்து நிதி சம்மந்தமான - கணக்கு வைப்பு முறை, விஞ்ஞானம், சமூகக்கல்வி அல்லது கலை - சிருஷ்டித்தல் (உருவாக்கும் திறமை) போன்ற பாடங்களும் அடங்கியிருக்கும். அந்த முழு பயிற்சிக்கு உதவியாகவுள்ள வகுப்புக்களும் ஒரு கிழமைக்கு சராசரி இரண்டு நாட்கள் இடம்பெறும்.

யார் தொழில் சம்மந்தமான அடிப்படைக் கல்வியில் ஒரு தகைமையும் அதோடு வேலக்கான மத்துாரா தேர்விலும் சித்தியடைந்தவர்களோ அவர்களுக்கு வேலைக்கான மத்துாரா ரிப்போட் (பத்திரம்) கிடைக்கும். வேலைக்கான மத்துாரா ரிப்போட் (பத்திரம்) வைத்திருப்பவர்கள் இரட்டைத் தகுதியைப் பெற்றிருப்பார்கள்: அவர்கள் தொழில் ரீதியான திறமையையும் அதோடு உயர் கல்வி கற்கும் கல்லுாரிக்குப் போவதற்கான முதிர்ச்சியையும் பெற்றிருப்பார்கள், அதனால் அவர்கள் பிரவேச அனுமதிப் பரீட்சை இல்லாமல் ஒரு உயர் கல்வி கற்கும் கல்லுாரிக்கு போகலாம். அதோடு வேலைக்கான மத்துாரா தொழில் ரீதியாக தொடர்ந்து படிப்பதற்கு ஒரு மிக நல்ல அடிப்படையாக அமையும்.

வேலைக்கான பயிற்சிகளுக்கான தகவல்களும், தகவல்கள் கொடுக்கும் இடங்களும் ஆரம்பப் பாடசாலையின் செக்குண்டார் வகுப்பு ஆசிரியர்கள் இளைஞர்களுக்கு வேலையைத் தேர்ந்தெடுப்பதற்கு தயார் செய்வதற்கு உதவியாக இருப்பார்கள் அதோடு பெற்றோர்கள் முதலாவதாகத் தொடர்பு கொள்ளக்கூடிய முக்கியமான ஆட்கள். முழுமையான தகவல்களை வேலைக்கான ஆலோசனை கொடுக்கும் இடத்தில் கொடுப்பார்கள்.

முழுமையான (விரிவான) தகவல்கள் கொடுக்கும் இடங்களின் சில விலாசங்கள்:

Amt für Jugnd und Berufsberatung இளைஞர்களுக்கும் அதோடு வேலைக்கு ஆலோசனை கூறும் காரியாலயம்
Zentralstelle für Berufs- und Studienberatung வேலைக்கும்- அதோடு கற்பதற்கும் ஆலோசனை கூறும் மையம்

**Bildungsdirektion Kanton Zürich**
Volksschulamt

Dörflistrasse 120
8090 Zürich
www.berufsberatung.zh.ch

Das Mittelschul- und Berufsbildungsamt சூரிச் மாநிலத்திலுள்ள கல்வித் திணைக்களத்தின்
der Bildungsdirektion Kanton Zürich நடுத்தரப் பாடசாலை- அதோடு வேலைக்கான பயிற்சிக்கான காரியாலயம்
Ausstellungsstrasse 80
8090 Zürich
www.mba.zh.ch

Zentralstelle für Berufsberatung வேலைக்கு ஆலோசனை கூறும் மையம்
Lehrstellennachweis des Kantons Zürich
www.lena.zh.ch
online-Verzeichnis der offenen Lehrstellen

# தொடர்ந்து படிக்கும் பாடசாலைகள்

நடுத்தரப் பாடசாலை (கிம்நாசியம்) (Mittelschule)
**சூரிச்சிலுள்ள கிம்நாசியத்திற்கான கல்வி முறைகள் சுவிஸ் சட்டப்படி அங்கீகாரம் பெற்ற மத்துாராவை தழுவி இருப்பதோடு ஒரு சுவிசின் அங்கீகாரம் பெற்ற மத்துாராவிற்கான பத்திரம் கிடைக்க வழி காட்டும். இந்த மத்துாராவிற்கான பத்திரம் சுவிசிலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் போகும் தகுதியைக் கொடுக்கிறது. மருத்துவத்துறைக்குப் படிப்பதற்கு ஒரு மேலதிக பிரவேச அனுமதிக்கான பரீட்சையை செய்ய வேண்டும். கிம்நாசியத்தில் பாடங்கள் படிப்பிப்பது ஒரு கஷ்டமான உயர் மட்டத்தில் முறைப்படி கற்றறிந்த ஆசிரியர்களால் சொல்லிக் கொடுக்கப்படும். திறமையும் அதோடு நல்ல பெறுபேறுகளை விரும்புகின்ற செக்குண்டார் வகுப்பு மாணவிகளும், மாணவர்களும் செக்குண்டார் வகுப்பிலுள்ள பிரிவு A யில் (மேலும் 2015 இல் இருந்து பிரிவு B யும்) உயர் அல்லது நடுத்தர மட்டத்திலுள்ள வகுப்புக்களுக்குப் போயிருந்தால், அவர்கள் 2வது அல்லது 3வது வருஷத்தின் பின் குறுகிய கால கிம்நாசியத்திற்குப் போகலாம்.**

**யார் கிம்நாசியத்திற்குப் போக விரும்புகிறார்களோ, அவர்கள் ஒரு மத்துாராவிற்கான பிரிவை தெரிவு செய்ய வேண்டும்:**

- **பழைய (பழைய காலத்திற்குரிய) பாஷைகளுக்கான பிரிவு (A) லத்தீன் அதோடு/அல்லது கிரேக்க மொழி அதோடு நவீன பிற நாட்டுப் பாஷைகள் உடன், ஆனால் இந்தப் பழைய பாஷைகளில் ஒன்றிற்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.**

- புதிய (சமீப காலத்திற்குரிய) பாஷைகளுக்கான பிரிவு (N) நவீன பிற நாட்டுப் பாஷைகள் உடன், இதில் ஒன்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

- கணிதம் - விஞ்ஞானத்திற்கான பிரிவு (MN) „உயிரியலும் அதோடு இரசாயணமும்“ அல்லது „பௌதீகமும் அதோடு கணக்கை பிரயோகிக்கும் முறையும்“ உடன், இதில் ஒன்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

- பொருளாதாரம் - சட்டத்திற்கான பிரிவு (WR) முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட „பொருளாதாரமும் அதோடு சட்டமும்“ உடன்

- சங்கீதத்திற்கான பிரிவு (M) „படம் வரைதல்“ அல்லது „சங்கீதம்“ உடன், இதில் ஒன்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

ஒரு இரண்டு பாஷைகளை மத்தூரில் படிப்பதற்கு (டொச் / ஆங்கிலம், டொச் / பிரெஞ்சு, டொச் / இத்தாலி) சூரிச்சில் இருக்கின்ற 18 கிம்நாசியங்களுக்குப் போகலாம். விஷேஷ திறமைகள் இவற்றில் இருந்தால் கலை - அதோடு விளையாட்டிற்கான கிம்நாசியம் MNG ரம்மிபியூலில் (Rämibühl) அதோடு லிற்சியோ ஆர்ரிஸ்ரிக்கோ (Liceo Artistico) விலும் படிக்கலாம். இந்த 5 வருட குறகிய கால கிம்நாசியம் இந்தப் பாடசாலைகளில் கலை அதோடு விளையாட்டிற்கான திறமைகளை ஊக்குவிப்பதோடு அதேநேரம் சுவிசின் அங்கீகாரம் பெற்ற மத்தூர் கிடைக்கும், இந்த லிற்சியோ ஆர்ரிஸ்ரிக்கோ மேலும் இத்தாலிப் பாஷையில் உயர் கல்வி கற்பதற்கான தகுதியையும் கொடுக்கும்.

கல்வி கற்பதற்கான பலவிதமான வாய்ப்புக்களுடன் சர்வதேச பல்கலைக்கழக முதல் பட்டத்திற்கான படிப்பும் (International Baccalaureate) (IB) இருக்கிறது, அது ஒரு சுவிஸ் மத்தூருடன் சேர்ந்து எடுக்கலாம், அதேமாதிரி ஆரம்பப் பாடசாலையின் செக்குண்டார் வகுப்பை முடித்த பின் மூன்று அல்லது நாலு வருடங்கள் கிம்நாசியத்தில் (Mittelschule) படித்தால், höhere Fachschule அல்லது Fachhochschule (உயர் கல்வி கற்கும் கல்லூரி) க்கு போகலாம். இந்த IB படிப்பிற்கான சலுகை இலக்கியம் - அதோடு ரியால் கிம்நாசியம் ரம்மிபியூலில் அளிக்கப்படுகிறது.

தொழில் துறைக்கான நடுத்தரக் கல்லூரி (அக்கடமி) (Fachmittelschule)
தொழில் துறைக்கான நடுத்தக் கல்லூரியில் (Fachmittelschule) (FMS) மூன்று வருடங்களுக்குப் பின் ஐந்து பிரிவுகளில் ஒரு தொழில் துறைக்கான பத்திரம் கிடைக்கும், இதன்மூலம் Höheren Fachschule க்கு போவது சாத்தியமாகும். நாலாவது வருடத்தில் எல்லாப் பிரிவுகளிலும் (சுகாதாரம் அதோடு விஞ்ஞானம், கற்பிக்கும் கலை (போதனா சாஸ்திரம்), தகவல்த் தொடர்பு, சங்கீதம் அல்லது நாடகம் (நடிப்பு)

போன்ற பிரிவுகளில் அந்தத் துறைக்கான மத்துாரைப் பெறலாம், இதோடு குறிப்பிட்ட படிப்பிற்கு Fachhochschule க்கு போகலாம். அதிகமான பிரிவுகளில் நாலாவது வருடத்தில் தெரிவுசெய்த வேலைக்கு ஒரு பயிற்சியும் அதோடு எல்லாப் பிரிவுகளுக்கும் ஒரு விஷயத்தை தேர்ந்தெடுத்து அதைப்பற்றி ஆராய்ந்து எழுதவும் வேண்டும். போதனா சாஸ்திரம் (கற்பிக்கும் கலை) இற்கான பிரிவில் நாலாவது வருஷத்தில் ஒரு அரை வருடத்திற்கு போதனா சாஸ்திரத்திற்கான மத்துாரா படித்தால் (Fachmaturität Pädagogik), அது ஒரு பரீட்சையோடு முடிவடையும் அதோடு போதனா சாஸ்திரத்திற்கான உயர் கல்வி கற்பிக்கும் கல்லூரியில் படிப்பது உறுதியாகும்.

வர்த்தகத்திற்கான நடுத்தரக் கல்லூரியும் (Handelsmittelschule) அதோடு கணணிக் கலைக்கான நடுத்தரக் கல்லூரியும் (Informatikmittelschule)
வர்த்தகத்திற்கான நடுத்தரக் கல்லூரியும் (HMS) அதோடு கணணிக் கலைக்கான நடுத்தரக் கல்லூரியும் (IMS) வர்த்தக சம்மந்தமான வேலைக்கான மத்துார் (Kaufmännischen Berufsmaturität) கிடைக்க வழிகாட்டும். இந்த HMS மேலதிகமாக வர்த்தகத் தொழிலுக்கான ஒரு சுவிசின் திறமைக்கான பத்திரத்தோடு முடிவடையும், IMS மேலதிகமாக ஒரு கணணிக்கலையில் சுவிசின் திறமைக்கான பத்திரத்தோடு முடிவடையும்.

விண்ணப்பம் செய்வதற்கான முறை
- கிம்நாசியம், FMS, அதோடு HMS போன்றவற்றிற்கு விண்ணப்பம் செய்வதற்கான கடைசி நாள் மாசி மாதம் 10ம் திகதி.
- கலை - அதோடு விளையாட்டிற்கான கிம்நாசியத்திற்கு தை மாதம் 15ம் திகதி.
- கணணிக் கலைக்கான நடுத்தரக் கல்லூரிக்கு புரட்டாதி மாதம் 30ம் திகதி.

கிம்நாசியம் அதோடு Handels- Fachmittelschulen புரட்டாதி மாதத்திலும், (Informatikmittelschulen ஆகஸ்ட் மாத கடைசியிலும்) பெற்றோருக்கும் மேலும் எதிர்கால (வரப்போகிற) மாணவிகளுக்கும் அதோடு மாணவர்களுக்கும் தகவல்கள் தெரிவிப்பதற்கான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வார்கள். இந்த சரியான திகதிகள் கன்ரோன் சூரிச்சின் புரட்டாதி மாத பாடசாலைச் செய்தித் தாளில் பிரசுரிக்கப்படும்.

இந்த விண்ணப்பப் படிவங்களை தகவல்கள் தெரிவிக்கும் மாலைப் பொழுதில் எடுக்கலாம் அல்லது பின்னர் ஒவ்வொரு பாடசாலைச் செயலாளருடைய காரியாலயத்தில் எடுக்கலாம் அல்லது தொலைபேசி மூலம் அனுப்பும்படி சொல்லலாம் (கட்டணம் 20 பிராங்குகள்). பெற்றோர்கள் ஒரு குறிப்பிட்ட கிம்நாசியத்தின் தலைவருக்கு இந்த விண்ணப்பத்தைச் செய்ய வேண்டும்.

கன்ரோன் சூரிச்சிலுள்ள நடுத்தரப் பாடசாலைகளைப் பற்றிய தகவல்களுக்கான சிறு பிரசுரம்

**நடுத்தரப் பாடசாலை ஆம் - ஆனால் எது?**
**சம்மந்தப்பட்ட விலாசம்:**

Bildungsdirektion Kanton Zurich
Mittelschul – und Berufsbildungsamt
Ausstellungsstrasse 80, Postfach
8090 Zürich

**நடுநிலைப் பாடசாலை - அதோடு வேலைக்கான பயிற்சிகளுக்கான அலுவலகத்தின் இன்ரநெற் பக்கத்தில் கன்ரோன் சூரிச்சிலுள்ள செக்குண்டார் வகுப்பு II பற்றிய தற்போதைய முழுத் தகவல்களையும் பெறலாம்:**
www.mba.zh.ch

**வேறு படிப்புகளுக்கான வாய்ப்புக்கள் (இடைக்கால சலுகைகள்)**
**இளைஞர்களுக்கு, ஆரம்பப் பாடசாலைக்குப் பின் வேலைக்கான பயிற்சிகள் ஒன்றும் கண்டுபிடிக்காவிட்டால் அவர்களுக்கு நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன: 10ம் வகுப்பு, வேலை தெரிவுசெய்யும் பாடசாலை, வேலைக்காக முதலே தயார்ப்படுத்துவது.**
**இதைப்பற்றிய தகவல்களை இதன் கீழ் காணலாம்**
www.bws.ch
www.mba.zh.ch

**இளைஞர்கள், குடும்பம் அதோடு வேலைக்கான இன்ரநெற் வழிகாட்டி:**
www.lotse.zh.ch

**பெற்றோருக்கும் இளைஞர்களுக்கும் இது ஒரு மிகவும் பொருத்தமான, -தகவல்கள் தெரிவிக்கின்ற இன்ரனெற் பக்கம், அவர்களுக்கு இப்படியொரு கேள்வி எழுந்தால்: பாடசாலைக்குப் பின் மேற்கொண்டு என்ன செய்வது?**

© Februar 2014 | Bildungsdirektion Kanton Zürich | Volksschulamt